# மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் தொடக்கம்

**புது தில்லி, ஏப்.1:** நாட்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027-இன் முதல் கட்டம் புதன்கிழமை தொடங்கியது. முதல் நாளில் சுமார் 55,000 குடும்பங்கள் விவரங்களை சமர்ப்பித்தன.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல்கட்டமாக வீடுகளைப் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின் மூலம், நாட்டில் முதல்முறையாக எண்ம (டிஜிட்டல்) வழியில் தகவல் சேகரிப்பு மற்றும் தாமாக முன்வந்து தங்கள் குடும்ப விவரங்களை குடிமக்கள் பதிவு செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது.

இணையவழியில் முதல் நபராக தமது விவரங்களை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து, இந்தக் கணக்கெடுப்பு தொடங்கியது.

இதேபோல குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரும் இணையவழியில் கணக்கெடுப்புக்கான விவரங்களை பூர்த்தி செய்தனர்.

தற்போது அந்தமான் நிகோபார் தீவுகள், கோவா, கர்நாடகம், லட்சத்தீவு, மிசோரம், ஒடிஸா, சிக்கிம், தில்லியில் உள்ள கன்டோன்மன்ட் வாரியம் மற்றும் புது தில்லி நகராட்சி மன்றப் பகுதிகளில் குடிமக்கள் தாமாக முன்வந்து இணையவழியில் கணக்கெடுப்புக்கான விவரங்களை சமர்ப்பிக்கும் நடைமுறை தொடங்கியுள்ளது.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதல் நாளில் சுமார் 55,000 குடும்பங்கள் விவரங்களை சமர்ப்பித்தன. இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஏப்.1 முதல் ஏப்.15 வரை இணையவழியில் குடிமக்கள் விவரங்களை சமர்ப்பிக்கும் நடைமுறையும், ஏப்.16 முதல் மே 15 வரை வீடுகளைப் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பும் நடைபெற உள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948-இன் கீழ் திரட்டப்படும் இந்தத் தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் குடும்ப விவரங்களை தாமாக முன்வந்து சமர்ப்பித்து, மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைமுறையில் பங்கேற்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

# மேற்காசிய போர் பாதிப்பு: மக்கள் பிரச்னைகளை சரிசெய்ய பிரதமர் மோடி உத்தரவு



தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி.

புது தில்லி, ஏப்.1: மேற்காசிய போரால் மாறியுள்ள உலக சூழல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் துறைகளின் பிரச்னைகளை சரிசெய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அனைத்து அரசுத் துறைகளுக்கும் பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: புது தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவின் சிறப்புக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

மேற்காசிய போரை கருத்தில் கொண்டு பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மறுஆய்வு செய்யவும், அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவும் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பேசிய அமைச்சரவைச் செயலர், நாட்டில் பெட்ரோலிய பொருள்கள், குறிப்பாக திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி), திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி) ஆகியவற்றின் விநியோகம், தேவையான அளவு மின்சாரம் கிடைப்பது குறித்து விளக்கினார். புதிதாக பல்வேறு நாடுகளில் இருந்து எல்பிஜி மற்றும் எல்என்ஜி கொள்முதல் செய்யப்படுகிறது என்று அவர் கூறினார். வீட்டு உபயோக சமையல் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று கூறிய அவர், சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி, கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நாட்டில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பது குறித்தும், காரீஃப் மற்றும் ராபி பருவங்களில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் மோடி ஆலோசித்தார்.

மேற்காசிய போரால் ஏற்படும் பாதிப்பில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

தற்போதைய உலக சூழலால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் துறைகளின் பிரச்னைகளை சரிசெய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அனைத்து அரசுத் துறைகளுக்கும் பிரதமர் மோடி உத்தரவிட்டார். தற்போது மேற்காசிய போர் காரணமாக 2-ஆவது முறையாகப் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆந்திரத்துக்கு இனி ஒரே தலைநகரம்

புது தில்லி, ஏப். 1: ஆந்திர மாநிலத்தின் ஒரே தலைநகராக அமராவதியை சட்டரீதியாக அங்கீகரிக்க வகை செய்யும் மசோதா, நாடாளுமன்ற மக்களவையில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு காங்கிரஸ், பாஜக, தெலுங்கு தேசம் கட்சிகள் ஆதரவளித்தன.

மக்களவையில் இந்த மசோதா மீதான விவாதத்தை புதன்கிழமை தொடங்கி வைத்து, காங்கிரஸ் கட்சியின் எம்.பி. மாணிக்கம் தாகூர் பேசினார். அப்போது அவர் கூறுகையில், 'ஆந்திரத்தின் நிரந்தர தலைநகராக அமராவதி மாறுவதை காங்கிரஸ் ஆதரிக்கிறது. பெங்களூரு, சென்னை அல்லது ஹைதராபாத் போல அமராவதி வளர வேண்டும். அதேபோல் விசாகப்பட்டினம், திருப்பதி, கர்னூல் ஆகிய நகரங்களும் வளர்ச்சியடைய வேண்டும். மேலும், ஆந்திரத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்' என்றார்.

தெலுங்கு தேசம் எம்.பி.யும், மத்திய அமைச்சருமான சந்திரசேகர் பெம்மசானி பேசுகையில், 'மசோதாவை ஒருமனதாக மக்களவையில் நிறைவேற்ற வேண்டும்' என்றார். பாஜக எம்.பி. சி.எம். ரமேஷ் விவாதத்தில் பேசியபோது, ஆந்திர தலைநகரை இனி யாரும் மாற்றாதபடி, மசோதாவில் உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எதிர்ப்பு:** ஆந்திரத்தைச் சேர்ந்த முக்கிய எதிர்க்கட்சியான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி தரப்பில், மசோதாவை தங்கள் கட்சி கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மக்களவையில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர், மசோதா மீது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் பெரும்பாலான எம்.பி.க்கள் ஆதரவு அளித்ததையடுத்து, மசோதா நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது.

**சந்திரபாபு நாயுடு வரவேற்பு:** மக்களவையில் மசோதா நிறைவேற்றப்பட்டு இருப்பதை ஆந்திர முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சித் தலைவருமான சந்திரபாபு நாயுடு வரவேற்றுள்ளார்.

**பின்னணி:** ஒருங்கிணைந்த ஆந்திரம் 2 மாநிலங்களாக ஆந்திரம், தெலங்கானா எனப் பிரிக்கப்பட்டது. அப்போது, முந்தைய ஆந்திர மாநில தலைநகராக விளங்கிய ஹைதராபாத் நகரம், தெலங்கானா மாநிலத் தலைநகராக்கப்பட்டது. அதே நேரத்தில் ஆந்திரத்துக்கு அமராவதி தலைநகராக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. எனினும், 2019 முதல் 2024 வரை ஆந்திரத்தில் ஆட்சியில் இருந்த ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் அரசு, ஆந்திரத்துக்கு 3 தலைநகரங்களை அறிவித்தது.

ஆனால் 2024 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி வென்று மீண்டும் ஆட்சியமைத்ததும் அமராவதி மீண்டும் தலைநகராக்கப்பட்டது. இதுதொடர்பான மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது இந்த மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்த நிலையில், அடுத்து மாநிலங்களவையின் ஒப்புதலைப் பெற வேண்டும். அந்த அவையின் ஒப்புதல் பெறப்பட்டு, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அவரின் ஒப்புதல் கிடைத்ததும், 2024 ஜூன் 2 முதல் ஆந்திர தலைநகர் அமராவதி என்று சட்டரீதியாக அங்கீகாரம் கிடைத்துவிடும்.

# கிழக்கு உக்ரைனின் லுகான்ஸ்க் பிராந்தியம் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது: ரஷியா

**மாஸ்கோ, ஏப். 1:** கிழக்கு உக்ரைனின் முக்கியத் தொழில் மண்டலமான லுகான்ஸ்க் பிராந்தியத்தைத் தங்கள் படைகள் முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாகரஷியா புதன்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

கடந்த 2022-இல், உக்ரைன் மீது போர் தொடங்கிய காலத்திலிருந்தே இப்பிராந்தியத்தின் பெரும்பான்மை நிலப்பரப்பு ரஷியாவின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த நிலையில், எஞ்சியிருந்த சிறு பகுதிகளையும் தற்போது தங்கள் ராணுவம் மீட்டுள்ளதாக ரஷியா தெரிவித்துள்ளது.

**டான்பாஸ் பகுதியில் முன்னேற்றம்:** லுகான்ஸ்க், டொனெட்ஸ்க் ஆகிய இரண்டு பிராந்தியங்களை உள்ளடக்கிய டான்பாஸ் பகுதியை முழுமையாகக் கைப்பற்றுவதை ரஷியா தனது முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது.




லுகான்ஸ்க் மக்கள் குடியரசு தற்போது முழுமையாக விடுவிக்கப்பட்டு விட்டதாக ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர, ஸபோரிஷியா பகுதியில் உள்ள சில கிராமங்களையும் ரஷிய படைகள் தங்கள் வசப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உக்ரைன் மௌனம்:** ரஷியாவின் இந்த உரிமை கோரல் குறித்து உக்ரைன் தரப்பிலிருந்து இதுவரை எந்தவொரு அதிகாரபூர்வமான பதிலும் வரவில்லை.

இதனிடையே, போரின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து அந்நாட்டுப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என ரஷியா மீண்டும் வலியுறுத்தியது. எனினும், ரஷியாவின் இந்தக் கோரிக்கையை உக்ரைன் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

# மூன்றாம் பாலினத்தவர் சட்டத் திருத்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்

**புது தில்லி, ஏப். 1:** மூன்றாம் பாலினத்தவர் தங்களை சுயமாக அங்கீகரிக்கும் பிரிவை நீக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கடந்த திங்கள்கிழமை ஒப்புதல் அளித்தார்.

இதையடுத்து, இந்தச் சட்டம் மார்ச் 30-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக மத்திய சட்ட அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டது.

'மூன்றாம் பாலினத்தவர்' (திருநங்கை-திருநம்பி) என்ற வார்த்தைக்கு துல்லிய வரையறை அளிப்பதுடன், அந்த பாலினத்தவருக்கு இழைக்கப்படும் குற்றங்களின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தண்டனைகளை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், மூன்றாம் பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா-2026-ஐ மத்திய அரசு கொண்டுவந்தது.

மூன்றாம் பாலினத்தவருக்கு எதிரான குற்றங்களுக்கு 2019-ஆம் ஆண்டு சட்டப்படி அதிகபட்சம் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், தற்போதைய மசோதாவின்படி, அதிகபட்சம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் பாலினத்தவர் தங்களை சுயமாக அங்கீகரிக்கும் பிரிவை நீக்குவதுடன், உரிய மருத்துவ ஆதாரத்தை கட்டாயமாக்கும் இந்த மசோதா, மக்களவையில் மார்ச் 24-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் மார்ச் 25-ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட நிலையில் மார்ச் 30-ஆம் தேதி குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே இந்தச் சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.